

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம், இராஜா அண்ணாமலைபுரத்தில் நடைபெற்ற காஞ்சிபுரம் பிரகாஷ் சில்க்ஸ் & சாரிஸ் கே.டி. பிரகாஷ் சா – பி.லட்சுமி பாய் இணையரின் புதல்வர் கே.பி.ஸ்ரீனிவாஸ் சா – காஞ்சிபுரம் பி.எம்.கே. சாரிஸ் பி.எம்.கே.வி. விக்னேஷ்வர் சா – வி.நிவேதா பாய் இணையரின் புதல்வி வி.ஸ்ரீநிதிபாய் ஆகியோரது மணவிழா வரவேற்பில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். உடன் திருமதி. துர்கா ஸ்டாலின், முன்னாள் அமைச்சர் மா.சுப்பிரமணியன் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.



சட்டமன்ற கூட்டத்தொடர் நிறைவடைந்த நிலையில் – கழகத் தலைவர் – முன்னாள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஜீ. வி.மார்க்கண்டேயன் நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், நேற்று முன்தினம் (09.09.2026) காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், அ.தி.மு.க.வைச் சேர்ந்த கிருஷ்ணகிரி எஸ்.கே.நவாப், கிருஷ்ணகிரி நகர்மன்ற முன்னாள் தலைவர் திருமதி பரிதா நவாப், வட்டச் செயலாளர் அமீர்ஜிகில், வழக்கறிஞர் பர்ஹாகவல் ஆகியோர் தி.மு.கவில் இணைந்தனர். அதுபோது கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு, துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா, எம்.பி., அமைப்புச்செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தித் தொடர்பு தலைவர் டி.கே. எஸ்.இளங்கோவன், கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தே.மதியழகன், மாநில விவசாய அணி துணைச் செயலாளர் டேம் டி.வெங்கடேசன் ஆகியோர் உடனிருந்தனர்.



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (09.09.2026) காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் பச்சையப்பன் அறக்கட்டளையில், தி.மு.க. சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற எஸ்.பரமசிவம், காட்டூர் கோ.சம்பத், எஸ்.சுரேஷ் ஆகிய அறக்கட்டளை உறுப்பினர்கள் நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். அதுபோது கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு, துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா, எம்.பி., அமைப்புச்செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தித் தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, மாநில தகவல் தொழில்நுட்ப துணைச் செயலாளர் கார்த்திக் மோகன் ஆகியோர் உடனிருந்தனர்.



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம், புதுச்சேரி மாநிலம் தட்டாஞ்சாவடி சட்டப்பேரவை தொகுதி இடைத் தேர்தலில் கழக வேட்பாளராக அறிவிக்கப்பட்ட சேது (எ) சேது செல்வம் நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். அதுபோது புதுச்சேரி மாநில கழக அமைப்பாளர் இரா.சிவா, புதுச்சேரி மாநில சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் ஏ.எம்.எச்.நாஜிம் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.



புதுச்சேரி மாநிலம், தட்டாஞ்சாவடி சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலில், கழகத்தின் வெற்றி வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள சேது (எ) சேது செல்வம், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் – கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். அப்போது, புதுச்சேரி மாநில தி.மு.க. அமைப்பாளர் இரா.சிவா, புதுச்சேரி சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் ஏ.எம்.ஹெச்.நாசீம், மாநில துணை அமைப்பாளர் ஹனிபால் கென்னடி, பாகூர் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.ஆர்.செந்தில்குமார் ஆகியோர் உடன் இருந்தனர்.



மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில், கழகத்தின் வெற்றி வேட்பாளராக அறிவிக்கப்பட்டிருக்கும் வழக்கறிஞர் அணி இணைச் செயலாளர் இ.பரந்தாமன், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் – கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். அப்போது, காஞ்சிபுரம் தெற்கு மாவட்டச் செயலாளர் க.சுந்தர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் தா.மோ.அன்பரசன், இளைஞர் அணி மாநில துணைச் செயலாளர் அப்துல் மாலிக் ஆகியோர் உடனிருந்தனர்.

### கண்ணியமான அணுகுமுறை இல்லை!

# முதல்வரின் ‘உடல்மொழி’ நாகரிகமற்றது!

## விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் எம்.பி, கடும் கண்டனம்!

சென்னை, செப். 11–

மிசா கைது சம்பவத்தில் மு.க.ஸ்டாலின் குறித்து சட்டப்பேரவையில் பேசிய முதலமைச்சர் விஜய், கைகளை தாடைக்கு அருகே கொண்டு சென்று காட்டிய சைகை பெரிதும் சர்ச்சையாகியுள்ளது. இதற்கு இடதுசாரி தோழர்கள் கண்டனம் தெரிவித்துள்ள நிலையில், தற்போது வி.சி.க. தலைவர் திருமாவளவனும் கண்டனத்தை பதிவிட்டிருக்கிறார்.

வி.சி.க. தலைவர் தொல்.திருமாவள வன் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:–

காவல்துறை மானியத்தில் முதல்வர் அவர்கள் ஆற்றிய பதிலுரையின்போது, தி.மு.க. தலைவரும் மேனாள் முதல்வரு மான தளபதி ஸ்டாலின் அவர்களைக் கேலி செய்யும் வகையில் அவரது உடல்மொழி அமைந்திருந்ததாக கடும்



விமர்சனங்கள் எழுந்துள்ள நிலையில், முதல்வர் தரப்பில் ‘அது உள் நோக்கம் கொண்டதல்ல’ என்று விளக்கம் சொல்லப்பட்டிருக்கிறது.

எனினும், இதுபோன்ற ‘உடல் மொழிகள்’ கண்ணியமான அணுகுமுறை இல்லை என்பதையும் மனித மாண்புகளுக்கு எதிரானது என்பதையும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் சுட்டிக்காட்டுகிறோம். எந்தவொரு சூழலிலும் ஒருவரின் ‘தன்மதிப்பைக்’ குறைத்து மதிப்பிடுவதோ, காயப்படுத்துவதோ நாகரிகம் ஆகாது.

தனிநபர் ஒருவரின் மீதான அரசியல் விமர்சனங்கள் என்பது வேறு; தனிப்பட்ட முறையில் ஒருவரின் தன்மதிப்பைக் காயப்படுத்தும் விமர்சனங்கள் என்பது வேறு. கல்வி, பொருளாதாரம், அதிகாரம் போன்ற வலிமையில்லாத எளிய மனிதரையும்கூட காயப்படுத்தும் அணுகுமுறை ஒருபோதும் ஏற்புடையதில்லை.

அகவையில் மூத்தோரை மதிப்பது மனித மாண்புகளில் மிகவும் உயர்ந்ததாகும். எனவே, மாண்பு நிறைந்த ஒரு மகத்தான பொறுப்பிலுள்ள முதலமைச்சர் இனிவரும் காலத்தில் தனது உடல்மொழியில் மிகுந்த கவனமுடன் இருத்தல் நலம் பயப்பதாகும். முதல்வரின் பதிலுரையை யொட்டி அடுத்தநாள் தி.மு.க. தரப்பில் முதல்வரின் உரையில் சில பகுதிகளை அவை குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென கோரிக்கை வைக்கப்பட்டது.

**அமைச்சரின் கருத்து வரலாற்றுப் பிழையாகும்!**

அந்த விவாதத்தின் போது இடைமறித்து சட்டத்துறை அமைச்சர் அவர்கள் கூறிய கருத்து வரலாற்றுப் பிழையாகும். மிசா காலத்து அரசப்பயங்கரவாதம் எத்தகையது என்பது நாடறிந்த ஒன்றாகும். அந்தக் கொடிய ஒடுக்குமுறைக்குள்ளான தி.மு.க. தலைவர் குறித்து முற்றிலும் தவறான கருத்தினைப் பதிவு செய்தது கண்டனத்துக்குரியதாகும். அமைச்சர் அதனை திரும்பப் பெறுவதாக அறிவிக்க வேண்டுமென வலியுறுத்துகிறோம்.

இவ்வாறு தொல்.திருமாவளவன் எம்.பி. தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

# தருமபுரி மேற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் முனைவர்.பெ.பழனியப்பன் அறிக்கை!

தருமபுரி, செப்.11-

தருமபுரி மேற்கு மாவட்டச் செயலாளர் முனைவர். பெ.பழனி யப்பன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கழகத்தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞரணி செயலாளர், இளைய கலைஞர், சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, தருமபுரி மேற்கு மாவட்ட (பாப்பிரெட்டிப்பட்டி, பாலக்கோடு சட்டமன்றத் தொகுதிகள்) தி.மு.க. செயற்குழு கூட்டம் இன்று (11.09.2026 வெள்ளிக்கிழமை) காலை 10.00 மணியளவில் காரிமங்கலம், செல்வசாந்தி மஹால் திருமண மண்டபத்தில் மாவட்ட கழக அவைத்தலைவர் கே.மனோகரன்,



Ex.MLA தலைமையில் நடைபெறும்.

அதுசமயம் கழக மறுசீரமைப்பு குழு தலைமை கழக பிரதிநிதிகள் தலைமை தீர்மானக்குழு துணைத் தலைவர் பார்.இளங்கோவன் மற்றும் திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக அவைத் தலைவரும், மடத்துக்குளம் சட்டமன்ற உறுப்பினருமான இரா.ஜெயராம கிருஷ்ணன் பங்கேற்று ஆலோசனைகள் வழங்க உள்ளார்கள்.

இக்கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர், மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய கழக செயலாளர்கள், பேரூர் கழகச் செயலாளர்கள், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பேரூர் கழக தலைவர்கள், துணை தலைவர்கள், முன்னாள் ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், முன்னாள் ஒன்றியக்குழு தலைவர்கள், துணை தலைவர்கள் மற்றும் முன்னாள் பேரூர் கழக தலைவர்கள், துணை தலைவர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்கு மாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: 22.08.2026 அன்று சென்னை, அண்ணா அறிவாலயத்தில் கழகத்தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற தலைமைச் செயற்குழுக் கூட்டத்தில் கழக நிர்வாக சீரமைப்பு ஒரு மனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் ஒன்றிய, பேரூர், கிளை கழக மறுசீரமைப்பு செய்வது குறித்தும்.

கழக முப்பெரும் விழா குறித்தும்,

கழக வளர்ச்சி பணிகள் குறித்தும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### அநீதியாளனைவிட, அக்கிரமம், அநீதி என்று அறிந்தே அமைதி காக்கும்

# ‘அறிவாளிகளின்’ மவுனம் கொடூரமானது!

## வி.சி.க. பொதுச்செயலாளர் சிந்தனைச்செல்வன் கண்டனம்!

சென்னை, செப். 11–

விசிக பொதுச் செயலாளர், சிந்தனைச் செல்வன் வெளியிட்டுள்ள பதிவில், “அக்கிரமங்களை அரங்கேற்றும் அநீதியாளனைவிட, அது அக்கிரமம், அநீதி என்று அறிந்தே அமைதி காக்கும், அறிவாளிகளின் மவுனம் கொடூரமானது என்று கூறியுள்ளார்.

செய்தித் தொடர்பாளர் பாவலன் வெளியிட்டுள்ள அறிக்கையில், ‘காலங்கள் கடந்து போன நிலையில் இப்போது சர்க்காரியா ஆணையம் மற்றும் மிசா கொடுமைகள் குறித்தான வாதங்கள் தேவையற்றது.



1976ல் முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞரின் மீதான சர்க்காரியா ஆணைய ஊழல் குற்றச்சாட்டு நீதிமன்றத்தில் நிற்கவில்லை. 1980ல் தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது. நிலைமை அவ்வாறிருக்கையில் இப்போது ஏன் அதுபற்றிய விவாதங்கள்?

கலைஞர் தமிழ்நாட்டிற்கான இட ஒதுக்கீடு, மாநில உரிமைகள், இந்தி மற்றும் சமஸ்கிருத எதிர்ப்பு, அறிவியல் வளர்ச்சி, ஐ.டி பார்க் உள்ளிட்ட ஏராளமான சாதனைகளையும் நிகழ்த்தியிருக்கிறார். வாழ்நாள் முழுவதும் சனாதன சக்திகளை எதிர்த்து பல்வேறு மாற்றங்களுக்கு காரணமாகவும் இருக்கிறார். அதை நாம் மறக்க கூடாது.

அத்துடன், மிசா சட்டத்தை மிகக் கடுமையாக கலைஞர் எதிர்த்த காரணத்தினால், அன்றைக்கு திமுகவைச் சேர்ந்து பலரும் கைது செய்யப்பட்டார்கள். அந்த வரிசையில்தான் மு.க. ஸ்டாலின் கைது செய்யப்பட்டார். ஆகவே, சர்க்காரியா ஆணையம் மற்றும் மிசா சட்டம் போன்றவைகள் குறித்தான தேவையற்ற விமர்சனங்கள் தவிர்க்கப்பட வேண்டியவையாகும். இப்போதைக்கு தேவை ஆக்கப்பூர்வமான செயல் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதும், ஏற்கனவே நடைமுறையில் இருக்கும் நல்ல திட்டங்களை அப்படியே தொடர்வதும் தான் ஒரு நல்ல அரசுக்கு அழகு” என்று கூறியுள்ளார்.